★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

சட்ட சபை உறுப்பினர்களின் பொறுப்பற்ற போக்கு!

"சட்ட சபையில் உறுப்பினர்கள் பலர் இல்லாமலிருக்கிறார்கள். விவாதத்தில் கலந்து கொள்ளாமலும், அதனைக் கவனிக்காமலிருப்பதும் வருந்தத்தக்கது என்பதுடன், இது உறுப்பினர்களின் பொறுப்பற்ற போக்கினையே காட்டுகிறது.

"பொதுப் பணம் ஏராளமாகச் செலவிடப்படும்போது, அது விஷயங்களில் உறுப்பினர்கள் அக்கரை காட்டாம

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: மாசி 22உ திங்கள் (5—3—56) ★ ★ வெளியூர்: மாசி 22உ செவ்வாய் (6—3—56) [இதழ் 224

மந்திரி பக்தவத்சலத்திற்குக் கருப்புக் கொடி

கழகத்தோழர்கள் கொதிப்பு

இப்போது வேண்டாமென துணைப் பொதுச்செயலாளர் விளக்கம்

தட்சிணப் பிரதேச அமைப்பு யோசனையைக் கைவிட்டு; பிற மாநிலங்களின் எல்லையோரங்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தமிழ் மக்கள் தமிழகமெங்கும் கடந்த பிப். 20-ல் நடைபெற்ற அர்த்தாலின் மூலம் திட்ட வட்டமாகத் தெரிவித்திருக்கின்றனர். இதனை இந்தியப் பிரதமர் நேரு அவர்களும் உணர்ந்திருப்பதாக டெல்லி பாராளுமன்றத்தில் அண்மையில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

எனினும், சென்னை மாநில அமைச்சர்கள்—குறிப்பாக, அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள், தமிழ் மக்களின் ஒருமித்த சக்தியை உணரும் ஆற்றல் இல்லாததாலோ, அல்லது ஜனநாயகப் பண்பை மதிக்கும் மனவளம் பெற்றில்லாத காரணத்தாலோ, தமிழ் மக்கள் பிப். 20 அன்று எடுத்துக் காட்டிய கோரிக்கையையும், ஒருமித்த கருத்தையும் இழித்தும் பழித்தும் பேசிவருகிறார்.

மந்திரி பக்தவத்சலத்தின் இந்தப் போக்கு கண்டு கழகத் தோழர்கள் மிகக் கொதிப்படைந்திருக்கின்றனர்.

மக்களின் எண்ணங்களையும், 'அவர் போக்கை மக்கள் வெறுக்கின்றனர் — கண்டிக்கின்றனர்' என்பதையும், அவர் சுற்றுப் பயணம் செய்யும்போது ஆங்காங்கே கருப்புக் கொடி காட்டுவதின் மூலம் அவருக்கு உணர்த்துவதற்கு தி. மு. கழகத் தலைமை நிலையம் அனுமதி அளிக்க வேண்டுமாறு வடஆற்காடு மாவட்ட தி. மு. கழக முன்னாள் செயலாளரும், வ. ஆ. ஆட்சி மன்ற உறுப்பினருமான தோழர் ஏ. எல். சி. கிருட்ணசாமி அவர்கள், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களை நேரில் கண்டு கேட்டுக்கொண்டார்.

இதுபோன்றே மேலும் பல தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகளிடமிருந்து கடிதங்கள் வந்துள்ளன.

கழகத் தோழர்களின் இந்த எண்ணத்தைக் குறித்து பொதுச் செயலாளரிடம் துணைப் பொதுச் செயலாளர் கலந்து பேசியிருக்கிறார்.

அதற்கேற்ப, இப்பிரச்சினை குறித்து சர்வகட்சிக் கூட்டணியின் கருத்தையும் அறிந்து, கருப்புக் கொடி எதிர்ப்பு குறித்து கழகத் தோழர்களுக்கு விரைவில் அறிவிக்கப்படுமென்றும், அதுவரையில் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களுக்குக் கருப்புக் கொடி எதிர்ப்பு காட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென்று கழகத் தோழர்களைக் கேட்டுக் கொள்வதாக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

கவர்னர் பிரகாசா புலம்பல்

'தென்னாடு புரட்சிக் கோலம் பூண்டிருக்கிறது'

'வடநாட்டவர் தென்னாட்டைப் புரிந்து கொள்ள வேண்டும்'

"வடநாட்டவர் தென்னாட்டவரைப் புரிந்துகொள்ள வேண்டும்; விருப்பு வெறுப்பின்றி தென்னாட்டைத் தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

"வடநாட்டிற்கு எதிராகத் தென்னாட்டவர் புரட்சிக் கோலம் பூண்டிருப்பதை வடநாட்டவர் உணர்ந்துகொள்ள வேண்டும்"

என்றெல்லாம் சென்னை கவர்னர் பிரகாசா, பரேலி கோட்டரி சங்கத்தில் பேசுகையில் புலம்பியிருக்கிறார்.

"தென்னாடுதான் உண்மையான இந்தியாவாகும். அங்குதான், பழம் கலாச்சாரம் இன்னும் நீடித்து நிலைத்திருக்கிறது.

"சரித்திரத்தை ஆராய்ந்து தென்னாட்டவர், தங்களுக்கு வடநாட்டவர் தவறிழைத்து விட்டிருப்பதை நிரூபிக்கிறார்கள். நாம் இந்த உணர்வுகளை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. மாறாக அவற்றை மிகுந்த அனுதாபத்துடன் கவனிக்க வேண்டும்.

"எனவே வடநாட்டவர் தென்னாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும். வடநாட்டவர் தென்னவருக்கு எந்தக் கேடும் விளைவிக்க உத்தேசிக்கவில்லை என்றும் எல்லாத் தகராறுகளையும் நேர்மையாகவே தீர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள் என்றும் உறுதிமொழி தர வேண்டும்,"

என்றும் பேசியிருக்கிறார் கவர்னர் பெருமான்!

பானை வயிறு படைத்த முதலாளிகள்

பிரதமர் நேரு கருத்து

"கேலிச் சித்திரக்காரர்கள், முதலாளிகளைப் பானை வயிறு படைத்தவர்களாகப் படம் வரைவதை நேரு பண்டிதர் கண்டித்திருக்கிறார், விளையாட்டிற்காக!

"முதலாளித்துவ சமுதாயம், அமைப்பு இவற்றைக் குறிப்பதற்காக, கேலிச் சித்திரக்காரர்கள் பானை வயிறு படைத்த சிலாது உருவங்களைத் தீட்டுகிறார்கள்; இந்தக் கேலிச சித்திரக்காரர்களின் புத்திசாலித்தனத் குறைவு நமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது; முதலாளிகளைப் பற்றிப் பரம்பரையாகப் பெற்ற எண்ணத்தால், தொடர்ந்து அவர்களை அம்மாதிரிச் சித்திரிக்கிறார்கள்; ஆனால், எல்லா முதலாளிகளும் பானை வயிறு படைத்தவர்கள் அல்லர்; சிலர் வேண்டுமானால் அப்படி இருக்கக்கூடும்"

என்று; நேரு இந்திய தொழில் வர்த்தகக் கழகங்களின் கூட்டுச் சபைக் கூட்டத்தில் பேசுகையில் சிரிப்பிற்கிடையே கூறியிருக்கிறார்.

இப்படிக் கூறுமுன், கூட்டத்தில் கூடியிருந்த பெரும் தொழிலதிபர்கள், முதலாளிகளை ஒருமுறை பார்த்துக் கொண்டாராம், நேரு பண்டிதர்!

படித்துவிட்டு வேலையில்லாதோர்

ஐந்தரை இலட்சம் பேர்களாம்!

படித்துவிட்டு வேலையில்லாது திண்டாடுவோரின் எண்ணிக்கை தற்போது இந்தியாவில் 5½ இலட்சம் என்றும், படித்தவர்களுக்கு வேலை தேடித்தர தனியான முயற்சிகள் மேற்கொண்டாலன்றி, இவர்களின் எண்ணிக்கை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 20 இலட்சமாக இருக்கும் என்றும் திட்டக் குழு நியமித்த ஆராய்ச்சிக் குழு ஒன்று கணக்கிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

★

வேலைகோரி பெயர் பதிவு செய்வோர்

ஜனவரியில் எண்ணிக்கை குறைந்திருக்கிறதாம்

புதுடில்லி, மார், 5—

கடந்த 1955 டிசம்பர் திங்களில் வேலை தேடித்தரும் நிறுவனங்களில் வேலைகோரி புதிதாக பெயர் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை இந்தியா முழுமையிலுமாக 1,47 996 என்றும், ஆனால் இது 1956 ஜனவரியில் 1,42 106 ஆக குறைந்து விட்டது என்றும் தெரியவருகிறது.

1956 ஜனவரி இறுதியில் வேலைகோரி பெயர் பதிவு செய்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 7,173 456 என்றும், இது கடந்த திங்களைவிட 25,387 அதிகம் என்றும் கூறப்படுகிறது

மக்கள் சோஷலிஸ்டு தலைவர் கைது

ரேவா, மார்ச் 4—

மக்கள் சோஷலிஸ்டுக் கட்சிச் செயலாளர் திரிலோக் சிங் கைது செய்யப்பட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

ரேவா மாவட்ட எல்லைக்குள் நுழைந்ததும், அவர் வெளியேறி விட வேண்டுமென தடை விதிக்கப்பட்டதை அவர் எதிர்த்து, உத்தரவுக்குப் பணிய மறுத்ததாயும், அதனால்தான் கைது செய்யப்பட்டதாயும் கூறப்படுகிறது.

ரேவாவில் இணைப்பு எதிர்ப்பு இயக்கம் ஒன்றை மார்ச் 5-ந்தேதி முதல் துவக்குவதற்காக அவர் ரேவா வந்ததாகத் தெரிகிறது.

சென்னை மந்திரிகள் மான உணர்வு பெற!

டாக்டர் இலட்சுமணசாமி இடித்துரை

அடிக்கடி டெல்லிக்கு அழைக்கப்படுவது கௌரவமானதாயில்லை

டில்லியிடம் 'பிச்சை' கேட்டு நிற்பது இழிவைத் தேடித்தரும்

திட்டங்களில் தென்னாட்டிற்குத் தொடர்ந்து அநீதி இழைக்கப்படுகிறது

உரிய பங்கை மொத்தமாகப் பெற முயற்சிக்க வேண்டும்

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி (முதலியார்) எதிர்க். கட்சித் தலைவர் என்ற முறையில் சென்னை மேல் (சட்ட) சபையில் வரவு-செலவுத் திட்டம் குறித்த விவாதத்தின்போது பேசுகையில், சென்னை மந்திரிகள் மான உணர்வு பெற, அவர்கள் அடிக்கடி டெல்லிக்கு அழைக்கப்படுவதை எடுத்துக்காட்டி இடித்துரைத்திருக்கிறார்.

இரண்டாம் திட்டத்திலும் டெல்லி சர்க்கார் சென்னைக்கு இழைத்துள்ள அநீதி குறித்துக் கொதித்திருக்கிறார். அதைச் சுட்டிக் காட்டிப் பரிகாரம் என்னவென்றும் அவர் விளக்கம் தந்திருக்கிறார்.

அவர் குறிப்பிட்டதாவது:—

"திட்டக் குழு உறுப்பினர்களைச் சந்திக்க வருமாறு சென்னை மந்திரிகள் அடிக்கடி அழைக்கப்படுகின்றனர்; எல்லா விஷயங்களுக்கும் — சில்லரை விஷயங்களுக்குக் கூட டில்லிக்கு வருமாறு சென்னை மந்திரிகள் 'சம்மன்' செய்யப்படுகிறார்கள்; இது கௌரவமானதாக எனக்குப் படவில்லை; சென்னை மந்திரிகள் சமநிறையுடன்—உரிய அந்தஸ்துடன் நடத்தப்படுகிறார்கள் என்று எண்ணக் கூடியதாக இல்லை.

"திட்டக் குழுவினர், இரண்டாம் திட்டத்தில் சென்னை மாநிலத்திற்குப் பணம் ஒதுக்குவதில் நடந்துகொண்டுள்ள முறை 'மிகத் துரதிருஷ்டமான' ஒன்றாகும்.

"பெரும் தொழில்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் சென்னைக்குத் தரப்பட்டிருக்கும் ரூ. 175 கோடி மக்கள் தொகை கணக்குப்படி பார்த்தால்கூட எதிர்பார்த்ததில் சரிபாதி கூட இல்லை. ரூ. 2,000 கோடி திட்டத்தில் சென்னைக்கு ரூ. 175 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

"ஒரு குறிப்பிட்ட வகையான கொள்கை கொண்ட சிலரின் ஆதிக்கத்திற்குட்பட்டதாயிருக்கிறது, திட்டக் குழு!

"சென்னை தாக்கல் செய்யும் திட்டங்களுக்குத் திட்டக் குழு பணம் ஒதுக்க மறுத்துவிடுமானால் நாமாகவே அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். பிறரை எதிர்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 5—3—56 திங்கள்

மூக்கு வெளுக்கிறது!

(2)

போர்க்களத்தில் இறந்துபடுகிற ஒவ்வொருவரையும் இராணுவ மருத்துவர் பரிசோதித்துப் பார்த்து, அவர்கள் இறந்துவிட்டார்களென அத்தாட்சிப் பத்திரம் வழங்குவது வழக்கம். அதன் பிறகுதான் அந்தப் பிணங்களை, களத்திலிருந்து புதைகுழிக்கு அகற்றுவது முடியுமாம்.

அத்தகைய அத்தாட்சிப் பத்திரம் தரப்பட்டிருந்த ஒரு பிணத்தை அகற்ற ஆட்கள் முயன்றனர். அந்நேரத்தில், அப்பிணம் கண்திறந்து பார்த்து, 'நான் சாகவில்லை; என்னை என் அகற்ற முயலுகிறீர்கள்?' என்று கேட்டதாம். அதற்குப் பிணந் தூக்கிகள் 'நீ இறந்துவிட்டாயோ இல்லையோ, அது எங்களுக்குத் தெரியாது; நீ இறந்துவிட்டதாக இராணுவ மருத்துவர் கூறிவிட்டார்; அதைத்தான் நாங்கள் ஒப்புக்கொள்ளுவோம்' என்று கூறினார்களாம்.

அதேபோன்று, சுண்ணம்பைக் காட்டி இது 'வெண்ணெய்' என்று காங்கிரஸ் மேலிடம் சொல்லிவிடும்பட்சத்தில், அதை ஒருவரும் மறுக்கக்கூடாது—முடியாது. தக்க ஆதாரங்களோடு மறுத்தாலும், அவைகளை காங்கிரஸ் மேலிடம் ஒப்புக்கொள்ளாது. ஆதாரங்காட்டி மறுப்பவர்களையும், 'தேசத் துரோகிகள்; கலகக்காரர்கள்; விஷமிகள்' என வசைபுராணம் பாடும்.

நியாயமான காரணங்காட்டி எதிர்க்கின்ற அனைவருக்கும் மாசுகற்பித்துவிடுவதின் மூலம், தங்கள் போக்கினை—விரும்பத்தகாததாக இருந்தாலும்—நியாயமானது என நிலைநாட்டிவிடலாம் என்பது காங்கிரஸ் மேலிடத்தின் நடைமுறையாகிவிட்டது. இந்நாட்டு மக்களுக்கு எது தேவை எனத் தெரிந்து, அவைகளைச் செயலாற்றுவதற்குரிய உரிமை தங்களைத் தவிர வேறு எவருக்கும் கிடையாது என்பது காங்கிரஸ் மேலிடத்தாரைப் பிடித்துள்ள பெருநோயாகிவிட்டது. அந்த அழிநோய் கொஞ்சம் கொஞ்சமாகக் காங்கிரசையே அழித்துக்கொண்டு வருகிறது. சிறுகச் சிறுகச் சிதைந்து வருவதைக் கண்டுங்கூட, அதற்குப் பரிகாரம் தேடவேண்டும் என்ற எண்ணம் காங்கிரஸ் மேலிடத்தாருக்கு உதயமானதாகத் தெரியவில்லை.

மொழிவழி மாகாணக் கோட்பாடுதான் சிறந்தது என்று காங்கிரஸ் கடந்த முப்பது ஆண்டுகாலமாகச்சொல்லி வந்தது. அதைப் பரீட்சார்த்தமாக சில ஆண்டுக்காலமாவது செயலாற்றி, சாதக பாதகங்களை அனுபவ வாயிலாக நன்கு அறிந்து கொள்வதற்குள்ளாகவே, அந்தத்திட்டம் தவறானது என்றுகூற காங்கிரஸ் மேலிடம் முனைந்துவிட்டது. அதற்குப் பதிலாக, ஆங்கில ஏகாதிபத்தியக் காலத்தில் இருந்தது போன்றே இருமொழி பன்மொழி மாகாண அமைப்புகள்தான், மகாசிலாக்கியமானது என்று கூறத் துணிந்துவிட்டது.

மொழியை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்களைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ் கூறினால், அவ்வேற்பாடுதான் சிறந்தது—உயர்ந்தது என்று மற்றவர்கள் கூற வேண்டும். அது தவறானது; இருமொழி பன்மொழி மாகாண ஏற்பாடுகள்தான் தேவையானது என்று காங்கிரஸ் கூறத் துணிந்தால், அதுதான் இன்றியமையாதது—வரவேற்கத்தக்கது என மற்றவர்கள் கூறவேண்டும். இவ்வாறு, காங்கிரஸ் காட்டுகிற காடு மேடெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு பின்செல்லத் தயாராக இருக்கிறவர்கள்தான், அதன் அகராதிப்படி தேசபக்தர்கள் எனப் புகழப்படுவார்கள். இது என்ன, துக்ளக் போக்காக இருக்கிறதே என்று எவராவது கேட்டுவிட்டால், அவர்களை, காங்கிரஸ் மேலிடம் தூற்றித் திரிய முன்வந்துவிடும்.

காங்கிரஸ் மேலிடம் நேற்று வரையில், ஆதரித்துவந்த மொழிவழி மாகாண அமைப்புக் கருத்தை, கனம் காமராசர் அவர்களும் ஆதரித்தே வந்திருக்கிறார். எனவே, இருமொழி பன்மொழி மாகாண அமைப்புக் கருத்தை இன்று ஆதரிப்பது எனக் காங்கிரஸ் மேலிடம் தீர்மானித்துவிட்ட பிறகு, கனம் காமராசர் அவர்களும் கண்டிப்பாக அதைப் பின்பற்றியே ஆதரித்துத் தீருவார் என்பது சொல்லாமலே விளங்கும்.

அமிர்தசரஸ் மாநாட்டிலிருந்து கனம் காமராசர் சென்னை வந்ததும், 'தட்சிணப் பிரதேச ஏற்பாட்டில் கையெழுத்துப் போட்டது உண்மையா' என்று நிருபர்கள் அவரைக் கேட்டிருக்கிறார்கள். 'போட்டேன் அல்லது இல்லை' என வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற முறையில் அவர் பதிலளித்து இருக்கவேண்டும். ஆனால், அவரோ, பீகார்—வங்க இணைப்பை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டுள்ள அம்மாகாண முதல் மந்திரிகளைவிட மேம்பட்ட ஜனநாயகவாதி என்று தம்மைப் பிறர் நினைக்க வேண்டும் என்ற அற்ப நினைப்பில் 'நான் என்ன சர்வாதிகாரியா?' எனப் பதில் கேள்வி கேட்டு இருக்கிறார்! இதிலிருந்து அவர் இருமொழி மாகாணக் கருத்தை ஆதரிக்கவில்லை என்று எவரும் கூற முன்வரமாட்டார்.

'நாம் எப்பொழுது தட்சிணப் பிரதேசத்தைப் பெறமுடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?' என மற்றொரு நிருபர் கேட்டிருக்கிறார்.

'மொழிவழி மாகாண அமைப்பைத் தீர்மான மூலமாக லாகூரில் போட்டு முப்பது ஆண்டுக் காலமாகிறது. தட்சிணப் பிரதேசம் வருவதாகவே இருந்தால், நாம் சில ஆண்டுக் காலம் காத்திருக்கக் கூடாதா?' என்று, கனம் காமராசர், அதற்குப் பதில் விடை போட்டிருக்கிறார். தட்சிணப் பிரதேசம் இன்று இல்லையானாலும் சில ஆண்டுக் கழித்தாவது வருவது நிச்சயம் என்ற உண்மைதான் கனம் கூறிய பதிலிலிருந்து பெறப்படுகிறதே ஒழிய, தட்சிணப் பிரதேசத்தை அவர் ஆதரிக்கவில்லை என்பதற்கு விளக்கம் தருவதாக இல்லை.

'மொழிவழி அமைப்பைக் கோருகிற லாகூர் தீர்மானமும் இருமொழி அமைப்புக் கருத்தைக்கொண்ட அமிர்தசரஸ் தீர்மானமும், ஒன்றுக்கொன்று முரண்பாடு உடையதாக இல்லையா?' என்று நிருபர்கள், கனம் காமராசரை மடக்கி இருக்கிறார்கள்.

அதற்கு கனம் அவர்களோ, "எனக்கு ஒரு முரண்பாடும் தெரியவில்லை. ஒரு கட்டத்திலிருந்து மற்றொரு கட்டத்திற்கு முன்னேற்றமடைந்துள்ளதைத்தான் அது தெரிவிக்கிறது" என்று திட்டவட்டமாகக் கூறி இருக்கிறார்.

நாட்டு முன்னேற்றப்பாதையில் மொழிவழி அமைப்புக் கருத்தை வலியுறுத்திய லாகூர் தீர்மானம் ஒரு மைல் கல் — அதே முன்னேற்றப் பாதையில் இருமொழி இணைப்புக் கருத்தை ஆதரிக்கும் அமிர்தசரஸ் தீர்மானம் மற்றொரு மைல் கல்!

பாதை — முன்னேற்றமானது! கனம் காமராசர், தட்சிணப் பிரதேச அமைப்புக் கருத்துக்குத் தரும் அருமையான விளக்கம், இது!

லாகூருக்கும் அமிர்தசரசுக்கும் உள்ள முரண்பாடு கனம் காமராசருக்குப் படவில்லை! காங்கிரஸ் மேலிடத்திற்கும அம்முரண்பாடு தெரிந்தால் அல்லவா, இக்கனத்துக்கும் தெரிவதற்கு!

முரண்பாடு இருப்பதை வரவேற்றுத்தானே முரண்படும் தீர்மானத்தை, அமிர்தசரசில் காங்கிரஸ் மேலிடம் போட்டிருக்கிறது!

முரண்பாடுதான்! இருந்தாலும் அது முன்னேற்றமானது!

காங்கிரஸ் மேலிடத்தின் விற்பனை ஏஜெண்டாக நியமிக்கப்பட்டுள்ள கனம் காமராசர் காங்கிரஸ் மேலிடம் பெற்றெடுத்த தட்சிணப் பிரதேச விலைபோகாப் பண்டத்தை, தமிழ் நாட்டு வீதிகளில் விலை கூறி விற்கக் கிளம்பி இருக்கிறார். அதைத்தானே, அவரிடம் நாம் எதிர்பார்க்க முடியும்?

மொழி மாகாண அமைப்புக் கருத்திலும் முன்னேற்றமானது' என தட்சிணப் பிரதேசக் கருத்தை கனம் காமராசர் சித்தரிக்கிறார். அவ்வாறு சித்தரிப்பது, தட்சிணப் பிரதேசக் கருத்தை கனம் ஆதரிக்கவில்லை என்பதையா காட்டுகிறது?

இது பற்றியே, அவர் உள்ளத்தை விளக்கிக் காட்டக்கூடிய அவர் வாயுரையிலிருந்தே ஆதாரம்காட்டி, நாளையும் எழுதுவோம்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டகால இறுதிக்குள்ளாக 45 600 'கூட்ஸ்வாகன்'களுக்கும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான திட்ட இலட்சிய அளவு 30,000 வாகனகள் ஆகும்.

இந்திய சர்க்கார், ஆதாரக் கல்வி அபிவிருத்திக்காக, நடப்பு நிதி ஆண்டில், 1956 ஜனவரி மாதம் வரை பல்வேறு மாநில சர்க்கார்களுக்கு நிதி உதவியாக மொத்தம் ரூ. 30,34,902 வழங்கியுள்ளனர்.

பிரச்சினை முக்கியத்துவம் பெறவில்லையாம்!

சலுகையளிப்பது மேலும்பலருக்கு ஆசையூட்டுமாம்!

இலங்கையிலிருந்து திரும்புவோருக்கு வாழ்வளிப்பது பற்றி மந்திரி சுப்பிரமணியம்

இலங்கையிலிருந்து திரும்பும் அகதிகளுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டும் என்ற பிரச்சினை, சர்க்காரின் உடனடியான கவனத்தைப் பெற வேண்டிய அளவு முக்கியத்துவம் பெறவில்லையாம்.

சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம், சட்டசபையில், இப்படித் தெரிவித்திருக்கிறார்.

1954 அக்டோபர் 19-ந் தேதியிலிருந்து 1955 அக்டோபர் 30-ந் தேதிவரை ஓராண்டில் 17,684 பேர் இலங்கையிலிருந்து திரும்பியிருக்கிறார்கள் என்ற தகவலையும் மந்திரி தந்திருக்கிறார்.

'இவர்களெல்லோரும் மறு வாழ்வு பெறுவதற்கு வகை என்ன செய்தீர்?' என்று சட்டசபையில் கேட்கப்பட்டபோது '1955 ஏப்ரல் திங்கள் முதல் ஓராண்டிற்கு இவர்களில் எவரேனும் வியாபாரம் செய்தால் அவர்களிடமிருந்து விற்பனை வரி வாங்க வேண்டாம் என்ற ஒரே ஒரு சலுகை மட்டும் தந்திருக்கிறோம்' என்று பதிலளித்திருக்கிறார், மந்திரியார்!

மேலும் வருகிறவர்கள், இலங்கையிலிருந்துவரும்போது 'திண்டு' கட்டிக்கொண்டு வருகிறார்களாம் — இங்கு வந்து 'சமமணம் கட்டி' உட்கார்ந்துகொண்டு 'சப்பு கொட்டி' உண்பதற்கு! செப்பியிருக்கிறார் மந்திரியார்!

எனவேதான், அவர்களுக்கு வாழ்வுதர, சர்க்கார் எந்தவித முயற்சியும் மேற்கொள்ள இப்போது அவசியம் இல்லையாம்!

இலங்கையிலிருந்து திரும்புவோருக்கு இங்கு அதிகமாக சலுகைகளும், வாழ்க்கை வசதிகளும் தந்துவிட்டால், மேலும் பலர் இலங்கையிலிருந்துதிரும்பிவிட எண்ணுவார்களாம்!

இங்கு தரப்படும் வசதிகளும், வாய்ப்புகளும், இலங்கையிலிருப்போருக்குத் தாயகம் திரும்பும் ஆசையை ஊட்டிவிடக் கூடாதாம்! துணிவோடு சொல்லியிருக்கிறார் சுப்பிரமணியம்!

அகதிகள் மறுவாழ்வுக்கு மேலும் ரூ. 11 கோடி!

'வேறெவரையும்விட எங்களுக்கு அதிக அக்கரை உண்டு'

டில்லி மக்கள் சபையில் மந்திரி விளக்கம்

"கிழக்குப் பாகிஸ்தானிலிருந்துவரும் அகதிகளுக்கு நிவாரணம் தருவதில்—குடியிருக்க வீடு, வாழ்வதற்கு வேலை வசதிகள் முதலியன தருவதில், கேள்விகேட்ட உறுப்பினர் மட்டுமின்றி, இங்கு சபையில் உள்ளவர்களாயினும்சரி, வெளியிலிருப்பவர்களாயினும்சரி, இவர்கள் எல்லோரையும்விட எனக்கு அதிகம் அக்கரை உண்டு என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்; அகதிகளுக்கு மறு வாழ்வு தரும் வேலை துரிதமாக நடைபெற வேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்,"

என்று, அகதி பிரச்சினை குறித்து, கேள்வி எழுப்பிய தோழியர் ரேணு சக்ரவர்த்திக்கு (கம்யூ) மக்கள் சபையில் அகதி மந்திரி மேகர் சந்த் கன்னு பதிலளித்திருக்கிறார்.

1954-ல் மட்டும் இந்தியா வந்த அகதிகளின் எண்ணிக்கை 1,20,000 என்றும், ஆனால் இது 1955-ல் 2,40,000 ஆக வளர்ந்திருக்கிறது என்றும், மேற்கு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஓடிவரும் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என்றும் அகதி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

அகதிகளை வரவேற்பதற்காக உள்ள முகாம்களில், தற்காலிகக் கொட்டகைகள் போடப்பட்டிருப்பது தனக்கு வருத்தத்தைத் தருவதாயும், அந்த வசதிக்குறைவை நீக்குவதற்காக, முகாம்களை நவீன சாதனங்களோடு கூடிய வீடுகள் கொண்ட நகரங்களாக்கிவிடத் தாம் நடவடிக்கை எடுப்பதாயும், சீக்கிரமே அகதிகளுக்குப் புதுப் புது நகரங்கள் முளைத்துவிடும் என்றும், எனவே, எதிர்க்கட்சியினர் அது குறித்துக் கவலை கொள்ளத் தேவைஇல்லை எனவும், எதிர்க் கட்சியினர் ஒத்துழைத்தால் போதுமெனவும் குறிப்பிட்டிருக்கிறார், மேசர் சந்த் கன்னு!

இந்த ஆண்டில் அகதி புனரமைப்பிற்காக உபரி மானியக் கோரிக்கையாக ரூ. 11,39 57 000 அவர் கேட்டிருந்தது, மக்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

'அகதிகளுக்கு மறு வாழ்வளிக்கும் பிரச்சினை, அரசியல் மாறுபாடுகள் — கட்சி வேறுபாடுகள் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது என்பதுடன், காங்கிரசின் தேர்தல் பிரகடனம் இவற்றுடன் சம்பந்தப்பட்டதுமல்ல' என்றும் அவர் தெரிவித்தாராம்!

இருதயத்தைப் படம் எடுக்கும் புதிய கருவி!

குறித்த ஒரு நொடியிலும் கணக்காக 'எக்ஸ்ரே' படம் பிடிக்கும் கருவி ஒன்று வாஷிங்டனில் தயாரிக்கப்பட்டிருக்கிறதாம்.

இருதயம் விரிவதும சுருங்குவதுமாகிய இருதயத் துடிப்பில் குறித்த எந்த நேரத்திலும் படம் பிடிக்க அது வசதியாயிருக்கிறது என்றும் இதனால்இருதய வியாதிகளை அறியவும் அவற்றுக்குச் சிகிச்சை செய்யவும் உதவியாகிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதற்கு முன்பெல்லாம், இருதயத்தின் 'எக்ஸ்ரே' படங்கள், இருதயம் விரிவதும் சுருங்குவதுமாகிய இயக்கத்தில் குறிப்பாக எந்த நிலையில் எடுக்கப்பட்டன, என்பது டாக்டர்களுக்குத் தெரியாது.

பிப்ரவரி 20-பெற்ற பெருவெற்றி

தமிழகம் தரும் நற்செய்தி

தக்கோலம்

கூட்டணித் தோழர்கள் 12-பேர்களை பிப். 19 இரவு 10-மணிக்கு அரக்கோணம் போலீசார் கைது செய்து கொண்டுச் சென்றனர். க. திருவேங்கடம், ஜி எல்லப்பன், நடராசன், தெய்வசிகாமணி, கதிர்வேலு, டி. வி. நாராயண்ன், கே. பி. ராசலிங்கம், எம். பி. மகம்மது, சு. கணேசன், த. ச. நாகசாமி, கதிர்வேலு, மு. செ. சுப்ரமணியன் ஆகிய தோழர்கள் கைது செய்யப்பட்டவர்களாவர்.

மறுநாள் காலை 7 மணிக்கு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. கடைகள், ரைஸ் மில், நெசவுத் தொழில், பஸ்கள், சினிமா யாவும் நிறுத்தப்பட்டன. அன்று தோழர்களை பி. ஆர். ஜான், த. சோமசுந்தரம், மதனகோபால், ஏ. ரத்தினம், என். எம். ஆதம் ஆகியோரை காலை 9 மணிக்கு கைது செய்து பகல் 1 மணிக்கு விடுதலை செய்தனர் மாலை தோழர் கே. ஆர் மாணிக்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர்கள் பி. ஆர். ஜான், வடிவேலு ஆகியோர் பேசினர் மக்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இராசகோபாலபுரம்

இராசகோபாலபுரம், இராதா நரசிம்மபுரம், தென்பறை ஆகிய மூன்று கிராமங்களிலும் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது சுமார் 50க்கு மேற்பட்ட கடைகள், இரண்டு மில்கள் யாவும் மூடப்பட்டிருந்தன; 3,500-க்கு மேரபட்ட விவசாயிகள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தனர். மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லவில்லை. உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

அம்மாசத்திரம்

கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் அனைவரும் வேலைநிறுத்தம் செய்தனர்; கடைகள் அனைத்தும் மூடப்பட்டன; பொது வேலை நிறுத்தம் அமைதியாக நடைபெற்றது; இரவு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருத்தங்கல்

பொதுவேலை நிறுத்தமும் கடையடைப்பும் நடைபெற்றது; மாலை 5 மணிக்கு தோழர் கே வி இராமசாமி தலைமையில் ஊர்வலமும், ஏ எஸ் கே. இல்லத்தின் முன் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் இராமச்சந்திரன், இரா. பெண்பாண்டியன், அ சந்திரசேகரன், இராமகிருஷ்ணன், டி. குருசாமி, ஏ எஸ். கனி ஆகியோர் பேசியபின், உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பூலாமேடு

பொது மக்களும் ஆசிரியர்களும், விவசாயிகளும் வேலைநிறுத்தம் செய்தார்கள். மாலை 4 மணிக்கு கழகத் தோழர்களும், விவசாயிகளும் சிதம்பரத்தில் நடைபெற்ற ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள் பொதுவேலை நிறுத்தம் சிறப்பாக நடைபெற்றது.

தாத்தையங்கார்பேட்டை

19-ந் தேதி இரவு 11 மணிக்கு தோழர்கள் மு. பெ. முத்துகருப்பன், டி. கே கும்பையன், எம். எஸ். என். இராசன் ஆகியோர் சர்வகட்சிக் கூட்டணியின் கூட்டம் முடிந்தவுடன் சப்-இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்டு, காலை 5 மணிக்கு முசிரி சப்-ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பிப். 20-ல், பொது வேலை நிறுத்தமும், கடையடைப்பும் அமைதியாக நடைபெறறது. மாலை 4 மணிக்கு சந்தை மைதானத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு மீண்டும் சந்தை மைதானம் வந்து உறுதிமொழி எடுத்துக்கொண்டு கலைந்தது.

வனவாசி

கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன; நெசவாளர்கள் மற்றுமுள்ள தொழிலாளர்கள் அனைவரும் பொதுவேலை நிறுத்தத்தில் பங்குகொண்டனர்.

காலை 9 மணிக்கு வனவாசி ரேடியோ மைதானத்திலிருந்து தோழர் கை. தங்கவேல் தலைமையில் சர்வகட்சியினரும் அடங்கிய மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாகச் சென்று 11 மணிக்கு ஊர்வலம் புறப்பட்ட இடத்தை வந்தடைந்தது. அங்கு நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் க. வெங்கடாசலம், மா. நாகப்ப (செட்டியார்) ஆகியோர் பேசிய பின்னர், உறுதிமொழி எற்றுக்கொள்ளப்பட்டது

குறிப்பு :- வனவாசியில் அர்த்தால் முதன் முறையாக இன்றுதான் நடைபெற்றது.

விருதம்பட்டு

தோழர எம். சி. வெங்காதரம் தலைமையில் விருதம்பட்டிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு மேட்டூர் வழி வழியாக காங்கேயநல்லூர் சென்று, விருதம்பட்டு வந்து ஊர்வலம் முடிந்தது. சுமார் 2,000 பீடித் தொழிலானர்களும், சுமார் 1,000 நெசவாளர்களும் வேலைநிறுத்தம் செய்தனர்.

கமுதி

பிப். 20-ல், தி. மு. கழகத் தோழர்கள் கே. எஸ் காமாட்சி, பெ. நரசிங்கம், அழகர்சாமி ஆகிய மூவரும் போலீசாரால் கைது செய்யப்பட்டார்கள்.

கமுதியை அடுத்த மூலக்கரைப் பட்டியில், போலீசாரால் தோழர்கள் ராமண்ணு, உக்கிரபாண்டியன் ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

மேலூர்

மேலூர், மீஞ்சூர், மற்றும் சுற்றுப்புறங்களில் உள்ள சிறிய கிராமங்களில் எல்லாம் கடைகள் மூடப்பட்டுக்கிடந்தன; தொழிலாளர்களும், விவசாயிகளும் வேலைக்குப் போகவில்லை. காலை 7 மணிக்கு ஊர்வலமும், மாலை 5-30 மணிக்கு பொதுக்கூட்டமும் நடைபெற்றது. உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கம்பம்

எல்லா வர்த்தக நிறுவனங்களும், ரைஸ் மில், சினிமா தியேட்டர், பாங்கி, அச்சகம், பித்தளை பாத்திர பட்டறைப் போன்ற தொழில் நிறுவனங்களும், காண்டிராக்ட் வேலை கட்டிட வேலை முதலியவைகளும் நிறுத்தப்பட்டு அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது காலையில் சேலம் தோழர் நடராசன் போலீசாரால் கைது செய்யப்பட்டார். காங்கிரஸ்காரர்கள் அர்த்தாலை எதிர்த்து, துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருந்தனர்; கடைகளை அடைக்க வேண்டாமென நேரடியாகச் சென்று வலியுறுத்தினர்; என்றாலும், வெற்றிகரமாக நடந்தது. காங்கிரஸ்காரர்களின் கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன.

இரவு 10 மணிக்கு காந்திமதி நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உறுதிமொழி எற்றுக்கொள்ளப்பட்டது.

பொன்னமராவதி

தி. மு. க. தோழர்கள் நல்ல, சுப்பையா, மெ சொக்கலிங்கம், எம். எம். நடராசன், கோ. இராமையா ஆகிய நால்வரையும் பிப். 19-ல் கைது செய்துவிட்டார்கள். மறுநாள் காலை கடைகளை அடைக்கும்படி கேட்டுக்கொண்டு தோழர் அருணுசலம் தலைமையில் சென்ற விவசாயிகள் சங்க தோழர்கள் 12 பேரையும் கைது செய்தனர் மாலை 3 மணிக்கு ஊர்வலம் நடைபெற்றது.

மாதானம்

அறுவடை செய்பவர்கள், மறு சாகுபடி செய்பவர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்தார்கள். எல்லாக் கடைகளும் மூடப்பட்டன.

புவனகிரி

பொதுவேலை நிறுத்தம், கடையடைப்பு வெற்றிகரமாக நடந்தது, மாலை ஊர்வலம் நடைபெற்று, உறுதிமொழி எற்றுக்கொள்ளப்பட்டது.

மோகனூர்

ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தும், மற்றும் பெரிய கடைகள், சிறிய கடைகள், உணவு விடுதிகள் அடைத்தும் பெரிய கம்பெனிகளின் பஸ்கள் ஓடாமலும், பொதுவேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. மாலையில் உறுதி மொழி ஏற்கப்பட்டது.

அனுமந்தன்பட்டி

காங்கிரஸ்காரர்கள் பொது வேலை நிறுத்தத்தை எதிர்த்தனர்; என்றாலும், பொதுவேலை நிறுத்தம் —அர்த்தால் வெற்றிகரமாகவும் அமைதியாகவும் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு, வள்ளுவர் திடலிலிருந்து சுமார் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அடங்கிய ஊர்வலம் அண்ணு மைதானத்தை அடைந்ததும் பொதுகூட்டம்நடைபெற்றது. தோழர்கள் கே. ஏ. கலையழகன், ஏ. எஸ். காளை, ஏ. சி. சவரியார், உ. ஆலப்பன், தைரியம், ஆ. மு. செல்வர் ஆகியோர் பேசினர். பின்னர் உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

திருநாகேச்சுவரம்

பொதுமக்கள், வர்த்தகர்கள், ஓட்டல் தொழிலாளர்கள், மற்றுமுள்ள எல்லோரும் ஒத்துழைத்து பொது வேலைநிறுத்தம் செய்தனர். கடையடைப்பு முழு வெற்றிகண்டது. ஊர்வலத்திற்கு அனுமதி தரப்படவில்லையாதலால் கழக மனையில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

சுருளிப்பட்டி

எல்லா வர்த்தக நிறுவனங்களும் கடைகளும் அடைக்கப்பட்டன; விவசாயிகள் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

19-ந் தேதி தோழர் சுப்பிரமணி என்பவரை முன்னேற்பாடாகப் போலீசார் கைது செய்து 21-ந் தேதி விட்டுவிட்டனர்.

காங்கிரஸ்காரர்களில் சிலர், கடைகளை மூடவேண்டாமென துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும், நேரடியாகவற்புறுத்தியும்அர்த்தாலை எதிர்த்தனர்; ஆனாலும் எவ்வித அசம்பாவிதமுமின்றி வெற்றிகரமாக அர்த்தால் நடந்தேறியது

இரவு அருளியப்ப கவுண்டர் வீட்டில் சர்வகட்சி தோழர்கள் கூட்டம் கூடி உறுதி மொழியை ஏற்றனர்.

கடையநல்லூர்

கடைகளும், தொழிற்சாலைகளும் மூடப்பட்டுப் பொதுவேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்தேறியது.

காங்கிரஸ்காரர்கள் கூட்ட மூலமாகவும், அறிக்கைகள் மூலமாகவும் வற்புறுத்தியும், போலீஸ் உதவி மூலம் பயமுறுத்தியும்கூடப் பொது வேலைநிறுத்தம் செம்மையாக நடைபெற்றது. மாலை 3 மணி அளவில் மறுமலர்ச்சி திடலில் தொடங்கிய மாபெரும் ஊர்வலம் 6 மணிக்கு மீண்டும் அவ்விடம் வந்தடைந்து, உறுதிமொழி எற்றுக்கொள்ளப்பட்டது

தோழர்கள் பி. எஸ். எஸ். பெருமாள்ராஜு, ப. புகழேந்தி, தி. நா. பாலகிருஷ்ணன், வி. எஸ். வெள்ளைப் பாண்டியன், சி. மணிமுத்து, இசக்கி, ரா. ராமசாமி (முதலியார்) ஆகியோர் கைது செய்யப்பட்டு அன்று இரவு 8 மணிக்கு தென்காசியில் விடுவிக்கப்பட்டனர்.

தண்டராம்பட்டு

எல்லாவிதக் கடைகளும் மூடப்பட்டன; ஓட்டல்கள், தொழில் நிலையங்கள், பள்ளிகள், யாவும் மூடிக்கிடந்தது. ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமாக பொது மக்கள் வந்திருந்தனர். தோழர்கள் பலர் பேசினர். இறுதியில் உறுதிமொழி வாசிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

லெப்பைக்குடிக்காடு

உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சுமார் 400 பேர் ஊர்வலமாகச் சென்றனர்; ஏராளமான தோழர்களும் கலந்துகொண்டனர். ஊர்வலம் மங்கம்மாள் சாலைவழியாகச் சென்று, முக்கிய வீதிகளின் வழியாக வந்து மீண்டும் விளையாட்டு மைதானத்தை வந்தடைந்தது. அங்கு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

சித்தையன்கோட்டை

சித்தையன்கோட்டை, அழகர் நாய்க்கன்பட்டி, சேடப்பட்டி, சொக்கலிங்கபுரம் முதலிய ஊர்களில் அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது. 2,500 பேர்கள் கொண்ட ஊர்வலம் சித்தையன் கோட்டை சரித்திரமே காணுத வகையில் 2 மைல் தூரம் சுற்றி காலை 9 மணிக்கு கடைவீதி வந்தடைந்தது; மாலை 5 மணியளவில், கூட்டம் ஆரம்பமாகி உறுதி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உள்ளிக்கோட்டை

கடைகள், மில்கள் யாவும் மூடி இருந்தன; மாணவர்களில் பெரும்பாலோர் பள்ளி செல்லவில்லை; அர்த்தால் அமைதியாக நடைபெற்றது.

மம்சாபுரம்

கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டன; பள்ளிக்கூடங்களெல்லாம் ஆறு, ஏழு பிள்ளைகளுடன் காலியாக இருந்தன. பொதுமக்கள் அர்த்தாலை கண்ணியத்துடன் மேற்கொண்டனர்.

பொள்ளாச்சி

அமைதியான முறையில் அர்த்தால் நடைபெற்றது. எல்லாக் கடைகளும் மூடிக்கிடந்தன. காங்கிரஸ்காரர்கள் கடையை திறக்கும் படியாகவும், போலீஸ் பாதுகாப்பு தருவதாகவும் கூறியும் ஒரு கடை கூட திறக்கப்படவில்லை. சினிமாக் கொட்டகைகளிலும் காட்சிகள் நடைபெறவில்லை. தோழர்கள் 4 பேரை கைது செய்து மாலையில் விட்டுவிட்டனர்.

அரூர்

திங்களன்று வழக்கமாகக் கூடும் சந்தை கூடவில்லை. கடைகள், ஓட்டல்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. அர்த்தால் வெற்றிகரமாக நடைபெற்றது. மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை. மாலை ஊர்வலத்தில் 5,000-க்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். தோழர் எஸ். கோவிந்தராசன் உறுதிமொழியை வாசித்த பின் மக்கள் ஏற்றுக்கொண்டனர்.

சின்னாளப்பட்டி

ஜவுளிக்கடைகள் மூடிக்கிடந்தன. கைத்தறி நெசவுத் தொழிலாளிகள் வேலை செய்யவில்லை. காப்பி ஓட்டல்களும் திறக்கவில்லை.

மாலை 4-30 மணிக்கு வள்ளுவர் திடலிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் அடங்கிய ஊர்வலம் புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று வள்ளுவர் திடல் வந்து அடைந்தது. மாலை 6 மணிக்கு தோழர் எம். வீரணன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். லோகநாதன், இராமசாமி, கே. எஸ் எஸ் சென்னையா, எஸ். சேதுபதி ஆகியோர் பேசினர். பின்னர் உறுதிமொழி ஏற்கப்பட்டது. காங்கிரஸ்காரர் எதிர்ப்பு அதிகமாக இருந்தும் வெற்றியுடன் வேலை நிறுத்தம் நடந்தேறியது.

குறிப்பு :—4000 கைத்தறி நெசவாளிகளும் வேலை நிறுத்தம் செய்து கிளர்ச்சியில் கலந்து கொண்டது பாராட்டத்தக்கது.

பெரணமல்லூர்

அர்த்தால் சிறப்புற நடைபெற்றது. அன்று கூடவேண்டிய வாரச் சந்தை கூடவில்லை; கடைகள் அனைத்தும் மூடப்பட்டன; 'ரைஸ் மில்'லும் மூடப்பட்டது; சர்க்கார் அலுவலகங்களில் எந்தப் பணியும் நடைபெறவில்லை; பெரும்பாலான உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பள்ளிக்குச் செல்லவில்லை; அர்த்தால் அமைதியான முறையில் வெற்றிகரமாக நடைபெற்றது.

கொத்தமங்கலம்

எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்தன; 200 மாணவர்கள் செல்ல வேண்டிய பள்ளிக்கு 20 மாணவர்களுக்கு மேல் செல்லவில்லை. கிராம மக்கள் நந்த ஒத்துழைப்பினுல் பொது வேலை நிறுத்தம் சிறப்புற நடைபெற்றது

செங்குன்றபுரம்

கடையடைப்பும், பொது வேலை நிறுத்தமும் அமைதியான முறையில், வெற்றிகரமாக நடைபெற்றது.

செங்காட்டுப்பட்டி

உயர்நிலைத் தொடக்கப்பள்ளி முழு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது. கிராமம் முழுவதும் கடையடைப்பு செய்தும், ரைஸ் மில்கள் மூடியும், வியாபாரிகளும், பொது மக்களும் வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டனர். காங்கிரசார் எதிர்ப்பு மிக பலமாக இருந்தும் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது. வேலை நிறுத்தத்தை முறியடிக்க காங்கிரஸ் கட்சி எடுத்துக்கொண்ட முயற்சி படுதோல்வியுற்றது.

மாலை 3 மணிக்கு கழக அலுவலகத்தின் முன் கூடியிருந்த மாபெரும் கூட்டத்தில் மக்களால் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடம்பூர்

மாலை 4-30 மணியளவில் தோழர் மா. க. செல்லையா தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. எல்லா வர்த்தக நிலையங்களும், தீப்பெட்டித் தொழிற்சாலை, கைத்தறி நிலயங்களும் மூடப்பட்டன. தி. மு. க. பணிமனையில் கூடி, மக்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மருதூர் வட்டம்

மருதூர், ராஜேந்திரம், தண்ணீர்பள்ளி ஆகிய ஊர்களில் எல்லாக் கடைகளும் மூடப்பட்டிருந்தன; ஆரம்பப் பள்ளிகளில் மிகக் குறைந்த பிள்ளைகளே இருந்தனர். விவசாயிகள், கல்பட்டறைத்தொழிலாளர்கள், நெசவாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டனர். பொதுவேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது

மோகனூர்

ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்; பெரிய கடைகள் —சிறிய கடைகள், உணவு விடுதிகள் எல்லாம் மூடிக் கிடந்தன. பெரிய கம்பெனிகளின் பஸ்கள் ஓடவில்லை. பொதுவேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்தது. அன்று மாலை உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வெள்ளகோவில்

கடையடைப்பு செய்யப்பட்டது; சினிமாக் காட்சி நிறுத்தப்பட்டது. காலை 9 மணிக்கு தோழர் சி. முத்துசாமி, வி. கே கலைமணி ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்தனர்; 200 பேர்களை மீண்டும் கைது செய்தனர். மாலையில் அனைவரையும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்தனர்.

கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற கூட்டத்தில், உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

கிடாரிப்பட்டி

தி. மு. கழகச் சார்பில் பொது வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. மாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அர்த்தாலை விளக்கிப்பேசி உறுதிமொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஒரிசாவில் அலுமினியம் தொழிற்சாலை

இந்தியா - கனடா கூட்டு முயற்சி

ஏழரை கோடி ரூபாய் மூலதனத்துடன் துவங்குகிறது

ஒரிசா மாநிலத்தில் பெரும் அணைக்கட்டு அமைந்துள்ள ஹிராகுட் எனும் இடத்தில் ஏழரை கோடி ரூபாய் பெறுமான அலுமினியம் தொழிற்சாலை ஒன்று துவங்குவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன என்று தெரிகிறது.

ஆண்டொன்றுக்கு துவக்கத்தில் 10,000 டன் உற்பத்தி செய்யும் இந்த தொழிற்சாலை, காலப்போக்கில் விரிவாகி, 20,000 டன்வரை உற்பத்தியில் ஈடுபடும் என்றும் தெரிகிறது.

200 ஏக்கர் பரப்பில் அமையவிருக்கிற இந்தத் தொழிற்சாலை, இந்தியாவும்—கானடாவும் கூட்டாகச் சேர்ந்து மேற்கொள்ளுவதாகும்.

'இந்தியன் அலுமினியம் கம்பெனி' என்ற நிறுவனத்தின் இந்திய, கானடா பிரதிநிதிகளான மகேஷ் சந்திரா, மற்றும் கிரீன்வுட் இருவரும் ஒரிசா முதன் மந்திரியான நவகிருஷ்ண சவுத்ரியைச் சந்தித்து, தொழிற்சாலை குறித்துப் பேசியிருக்கின்றனர்.

தொழிற்சாலை அமைப்பது குறித்து, சர்க்காருக்கும்—நிறுவனத்திற்கும் ஒப்பந்தம் கையெழுத்தாகிவிட்டதாம்.

அலுமினியம் தொழிற்சாலைக்கான 20,000 கிலோவாட் மின்சாரம் ஹிராகுட் மின்சாரத் திட்டத்திலிருந்து தரப்படும் என்றும், தொழிற்சாலை அமைவதற்கான, இடம் உடனடியாக ஒதுக்கித் தரப்படும் என்றும் ஒப்பந்தம் கூறுகிறது.

தொழிற்சாலை இந்த மார்ச் திங்கள் மத்தியிலேயே கட்டப்படவிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

வரவு - செலவுத் திட்ட பிரரேபணைகள்

வெளியானது குறித்து விசாரணை

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டப் பிரரேபணைகள் மக்கள் சபையில் தாக்கலாகும் முன்பே வெளியாகிவிட்டதாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி சர்க்காருக்கு மிகுந்த கவலையைத் தந்திருக்கிறதெனப் பிரதமர் நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

டில்லி சர்க்கார் இது பற்றி தீவிரமான புலன் விசாரணையில் ஈடுபட்டிருப்பதாயும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

மக்கள் சபையில் இரண்டு உறுப்பினர்கள் இது குறித்து ஒத்திவைப்புப் பிரரேபணைகள் கொண்டு வந்தனர். டாக்டர் லங்காசுந்தரம், ஏ. கே. கோபாலன் இருவரும் தங்கள் பிரரேபணைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், வரவு-செலவுத் திட்ட பிரரேபணைகள் வெளியாவது கவலைக்குரிய விவகாரம் என்றும், சபையின் உரிமையையே அது பறிப்பதாகும் என்றும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

சென்னை மந்திரிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்காது, நாமாகவே நமது காரியங்களைக் கவனிக்க முயற்சிக்க வேண்டும்.

'மத்திய சர்க்காரிடமிருந்து 'பிச்சை' வாங்கும் முறை மிகத் தீங்கு பயக்கக்கூடிய ஒன்றாகும்; நமக்கு இழிவு தேடித் தரத்தக்கதாகும்.

"திட்டக் குழுவிற்கும், மாநில சர்க்காருக்கும் ஏதாவது தகராறு கிளப்ப வேண்டுமென்பதல்ல என்னுடைய எண்ணம்.

"இம்மாதிரி 'பிச்சை' கேட்டுக் கொண்டிருப்பதற்குப் பதிலாக மாநிலத்தின் அபிவிருத்திக்காக நமக்கு நியாயமாக மத்திய சர்க்காரிலிருந்து கிடைக்க வேண்டிய அளவு தொகையை மொத்தமாகப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது நியாயமான கோரிக்கை என்றே எனக்குத் தோன்றுகிறது.

'தென்னாட்டில் பெரும் தொழில்கள் வளர்ச்சிக்கு வாய்ப்பே இல்லை என்பது மாதிரியில் ஒருவகை எண்ணம் உருவாக்கப்பட்டிருப்பது கண்டு நான் வருந்துகிறேன்.

'வெறும் கற்பிதமான காரணங்களைக் காட்டி, தென்னாட்டில் பெரும் தொழில் வளர்ச்சி ஏற்படாது செய்து வருவது கண்டும் நான் வருந்துகிறேன்.

"பல தொழில்களின் துலபமான வளர்ச்சிக்குத் தென்னாட்டில் வாய்ப்புகள் உண்டு; அவை குறித்து மாநில சர்க்கார் திட்டக் குழுவிற்கும், மத்திய சர்க்காருக்கும் எடுத்துரைக்கவேண்டும்."

தஞ்சை சப்-ஜெயிலில் கழகக் காளையர்

மாவட்டச் செயலாளர் சந்தித்தார்

தஞ்சாவூர், மார்ச் 3—

பிப்ரவரி பொது வேலைநிறுத்தத்தை முன்னிட்டுக் கைது செய்யப்பட்ட குத்தாலம்—திருவாவடுதுறை பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர்கள் எண்பர்மீது வழக்கு தொடரப்பட்டு தஞ்சாவூர் சப்-ஜெயிலில் 15 தினங்கள் தண்டனை அனுபவித்து வருகிறார்கள்.

அவர்களை, தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ சென்று சிறையில் சந்தித்து உரையாடினார்கள். அவர்கள் எண்மரும் 7—3—56 அன்று விடுதலை அடைகிறார்கள்.

தோழர்கள் அனைவரும் சிறை தண்டனை அனுபவித்தபோதிலும் மிக மிக உற்சாகமாகக் காணப்பட்டார்கள். அவர்கள் புதனன்று விடுவிக்கப்படும் போது ஆவன செய்து வழி அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாவட்டச் செயலாளர் அவர்களுடன் தஞ்சாவூர் கழக செயலாளர் பட்டு, மற்றும் மயூரநாதன், ஜேம்ஸ், கோவிந்தராசன் அவர்களும் தண்டனை பெற்ற தோழர்களை சிறையில் சந்தித்தனர்.

எதிர்கால நடவடிக்கை பற்றி ஆலோசனை

சர்வ கட்சி கூட்டணியின் முடிவுகள்

சர்வ கட்சிக் கூட்டணியின் பொது உறுப்பினர் கூட்டம் 3—3—56 சனி மாலை 6 மணிக்கு, கிருஷ்ணாம்பேட்டையில், கூட்டணித் தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் தோழர்கள் ம. பொ. சிவஞானம், ப. ஜீவானந்தம், இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஏ. சுப்பிரமணியம், ஜி. உமாபதி, கவிஞர் பாரதிதாசன், கே. விநாயகம், எஸ். சுயம்பிரகாசம், ஏ. இரத்தினம், மணலி கந்தசாமி, க. ந. நல்லசிவம், எம். சுந்தரராசன், சின்ன அண்ணாமலை, எம். பி. சுப்ரமணியம் ஆகியோரும், விசேட அழைப்பின் பேரில் அண்ணா, வி. கோபாலகவுண்டர், எம்.எல்.ஏ., கே. ஏ. மதியழகன், எம். ஆர். வெங்கடராமன், ஈ. எஸ். தியாகராசன், கா. மு. ஷெரீப் ஆகியோரும் வந்திருந்தனர்.

கூட்டத் துவக்கத்தில், வரவு - செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டது. பின்னர், கூட்டணியின் எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.

இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, பிப். 20-ந் தேதி நடைபெற்ற அர்த்தாலைக் குறித்து கருத்து அறிவித்தது குறித்தும், ஜனநாயக முறையில் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்க பிரதமர் நேரு முன் வரவேண்டியதை கூட்டணி வற்புறுத்த வேண்டிய அவசியத்தைப் பற்றியும் உறுப்பினர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.

பின்னர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

1. 'பிப்ரவரி 20-ந் தேதி தமிழகமெங்கும் கட்டுப்பாடாகவும், அமைதியாகவும், வெற்றிகரமாகவும் நடத்திக்காட்டப்பட்ட அர்த்தால் மூலம் வலியுறுத்தியுள்ள கோரிக்கைகளான (1) தட்சிணப் பிரதேச அமைப்பைக் கைவிட்டு மொழிவழி இராஜ்யம் அமைக்கப்பட வேண்டும்; (2) கேரள-ஆந்திர இராஜ்யங்களின் எல்லையோரத்திலுள்ள தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் ; (3) அவ்விதம் அமைக்கப்படும் புதிய இராஜ்யம் 'தமிழ் நாடு' என்று அழைக்கப்பட வேண்டும்,' என்பதை மீண்டும் வலியுறுத்துவதோடு, இக்கோரிக்கைகள் நிறைவேறும்வரை அவ்வப்போது தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதென்றும் சர்வ கட்சிக் கூட்டணி முடிவு செய்கிறது.

2. பிப்ரவரி 20-ம் நாள் அர்த்தாலுக்கு பேராதரவு தந்து அதனை வெற்றியுறச் செய்த பொதுமக்களுக்கு சர்வ கட்சிக் கூட்டணி, தனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், எதிர்காலத்தில் சர்வ கட்சிக் கூட்டணி மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பும், ஆதரவும் தருமாறு பொதுமக்களைப் பணிவன்புடன் வேண்டிக்கொள்ளுகிறது.

தேஷ்முக் ராஜினாமா?

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டப் பிரரேபணைகள் வெளியாகி விட்டதாக வெளிவந்த செய்திகளை ஒட்டி, நிதிமந்திரி தேஷ்முக் தான் பதவியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்திருக்கிறார் என்று கூறப்படுகிறது.

பிரதமர் நேருவுக்கு இது குறித்து அவர் எழுதிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

டில்லியில் பரவியுள்ள இந்தச் செய்தியை, தேஷ்முக் மறுக்கவோ, உறுதி செய்யவோ இல்லை என்றும் கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில் அலுமினியம் தொழிற்சாலை

நிறுவுவது பற்றி இன்னும் டில்லி பரிசீலிக்கிறதாம்

"பெரும் தொழில்கள் துவங்குவதற்கு நிதி வசதிகள் இருந்தால் மட்டும் போதுமானதல்ல; இயற்கை வளங்களும் இருந்தாக வேண்டும்.

"ஒரு தொழிலைத் துவங்க மின்சாரம் தேவை என்று இந்திய சர்க்கார் கேட்கும்போது நாம் தரத் தயாராக இருக்க வேண்டும்.

"சென்னையில் ஒரு அலுமினியம் தொழிற்சாலை நிறுவும் விஷயம் பரிசீலனையிலிருப்பதாக மத்திய சர்க்காரிடமிருந்து எனக்கு இப்போது கடிதம் வந்திருக்கிறது.

"அந்தத் தொழிற்சாலை அமைத்தால் புதிய வரவு-செலவுத் திட்டத்தில் விதிக்கப்படுகிற மின்சார விநியோகத்திற்கான 30 சதவிகித உபரி வரி, தொழிலைப் பாதிக்காதா?'— என்று டில்லி சர்க்கார் கடிதத்தில் கேட்டிருக்கின்றனர்.

"'மின்சார உபரிவரி ஒருபோதும் அலுமினியம் தொழிலை பாதிக்காது' என்று நான் எழுதவிருக்கிறேன்."

என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம், சென்னை சட்டசபையில் வரவு—செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

பாங்கிகளைத் தேசிய மயமாக்கும் யோசனை!

நிதி மந்திரி தேஷ்முக் கருத்து

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் மசோதா நிறைவேற்றம்

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் மசோதா டில்லி மக்கள் சபையில் நிறைவேறியுள்ளது.

குடியரசுத் தலைவர் பிறப்பித்த அவசரச் சட்டம் மூலம், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிர்வாகத்தை உடனடியாக சர்க்கார் ஏற்றுக்கொண்ட நடவடிக்கைக்கு இப்போது மக்கள் சபையால் அங்கீகாரம் தரப்பட்டிருக்கிறது.

அடுத்து இந்தத் தொழிலை நடத்துவதற்கு சர்க்காருக்குச் சொந்தமான 'கார்ப்பரேஷன்' ஒன்று அமைக்கப்படும் என்றும், இது, வரும் ஜூன் திங்கள் 15-ந் தேதியன்று நிறுவப்படும் என்றும், அதற்கான மசோதா ஒன்று வரும் மார்ச் 19-ந் தேதியன்று மக்கள் சபையில் தாக்கலாகும் என்றும் ரெவினியூ மந்திரி தெரிவித்திருக்கிறார்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழிலை தேசிய மயமாக்கியதற்குப் பொதுவாக நல்ல வரவேற்பிருந்திருக்கிறது; என்றாலும், இரண்டொரு பண முதலைகள், சர்க்கார் இந்த நடவடிக்கை எடுத்தது தவறு என ஓலமிடாமலில்லை.

அவசரச் சட்ட மூலம் இந்தத் தொழிலை மேற்கொள்ளாதுபோய் இருந்தால் தொழிலில் நிலவிக் கொண்டிருந்த கோளாறுகள் பலவற்றைக் கண்டுபிடித்திருக்க முடியாதென நிதி மந்திரி தேஷ்முக் பதிலளித்தது குறைபட்டோர் சிலருக்குத் திருப்தியை அளித்திருக்கிறது.

'பொது இன்ஷ்யூரன்ஸ் தொழிலையும் ஏன் தேசியமயமாக்கியிருக்கக் கூடாது?' என்று உறுப்பினர்கள் பலர் எழுப்பிய கேள்விகளுக்கு நிதி மந்திரி தந்த பதில் முழுத் திருப்தி தருவதாக இருக்கவில்லை.

எல்லா பாங்கிகளையும் தேசிய மயமாக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட கோரிக்கையை நிதி மந்திரி தேஷ்முக் நிராகரித்திருக்கிறார்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நன்மைகளை கிராமமக்களும் பெறுவதற்கான வாய்ப்புகளைச் செய்ய வேண்டியது அவசியம் எனவும் நிதி மந்திரி ஒப்புக்கொண்டிருக்கிறார்.

முன்னாள் சமஸ்தான பாங்கிகள்—முன்னாள் இந்திய சமஸ்தானாதிபதிகள் கலந்துகொண்ட அல்லது ஊக்கமளித்துவந்த பாங்கிகளை மட்டும் தேசிய மயமாக்க உத்தேசித்திருப்பதாயும் தேஷ்முக் தகவல் தந்திருக்கிறார்.

இந்திய எல்லையில்!

பாகிஸ்தான் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம்

இருநாடுகளும் ஆட்சேபம் கிளப்புகின்றன

சில்ச்சார், மார்ச். 4—

பாகிஸ்தான் எல்லையில் உள்ள போலீசார் இந்திய எல்லையில் அசாமில் உள்ள கச்சார் மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேசத்திற்குள் நேற்று இரண்டாவது முறையாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக செய்தி ஒன்று கூறுகிறது.

சேதம் எதும் ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லையாம்.

கடந்த பிப 29-ந் தேதியன்று, பாகிஸ்தான் படைகள் கரீமகஞ்ச் பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அதனால் சந்தையில சாமான் வாங்கிக்கொண்டிருந்த ஒருவர் இறந்து பட்டதாகவும், ஒரு போலீஸ்காரர் காயம் பட்டதாகவும் அசாம் சர்க்காரின் பிரதம காரியதரிசி நேற்றுத் தெரிவித்திருக்கிறாராம்.

போட்டி ஆட்சேபங்கள்

கடந்த பிப். 24-ந் தேதி முதல் இந்திய போலீசார் அசாம எல்லையோரங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் ஆனாலும் எவருக்கும் காயமேற்படவில்லை என்றும், பாகிஸ்தான் இந்திய சர்க்காரிடம் ஆட்சேபம் செய்திருக்கிறது என்றும், இதேபோல இந்திய சர்க்காரும பாகிஸ்தான் இராணுவம், போலீஸ் இவற்றின் அத்துமீறிய செயல்களைக் கண்டித்து ஒரு ஆட்சேபம் தந்திருப்பதாயும் தெரியவருகிறது.

சட்டசபை உறுப்பினர்

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

லிருப்பது வருந்தத்தக்கது. 'சபைக்கு வரும்போது உறுப்பினர்கள் கையெழுத்திடுவதுபோல, அவர்கள், சபையைவிட்டுக் கடைசியில் வெளியே செல்லும்போதும் கையெழுத்திட வேண்டும்—என்று விதியிருந்தால், உறுப்பினர்கள் வெளியேறமாட்டார்கள்',

என்று திரு. பொன்னம்பலக் கவுண்டர், சென்னை சட்டசபையில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது பேசுகையில், குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ